www.tamilarangam.net


# புதிய கண்ணோட்டம்

# NEW PERSPECTIVE

பங்குனி 1988 வெளியீடு - 1


## இலங்கையில் அமையப் போகும்

# பாசிச அரசுக்கான

## அபாயச் சங்கொலி தூரத்தில் கேட்கிறது

## மக்களே விழிப்பாயிருங்கள்!

## அதற்கெதிராகப் போராடத் தயாராகுங்கள்!

**இன்றைய நிலையில் சமூக மாற்றத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது எப்படி?**

**தற்போதைய சூழலின் இயல்பை நாம் சரிவரப் புரிந்து கொண்டிருக்கிறோமா?**

**ஈழமக்களாகிய நாம் எதை நோக்கிப் போகிறோம்?**

இக்கேள்விகளுக்கான தெளிவான திட்டவட்டமான பதில்கள் இல்லாத நிலையில் நிலவக்கூடிய குழப்பங்கள் தற்போது நிலவுகின்றன.

எனவே, தற்போதைய அரசியல் சூழ்நிலையை ஆராய்ந்து புரிந்து கொள்வதன் மூலமே நாம் எதிர்காலத்திற்கான அரசியல் திசை வழியையும் வேலைத் திட்டத்தையும் வகுக்கவும் செயல்படுத்தவும் முடியும்.

இந்தியப் படைகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக ஈழப் பிரதேசங்களில் அதிகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது; தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலை வெறித்தனம் கட்டற்றதாகத் தலை விரித்தாடுகிறது; திருமலையில் சிங்களக் குடியேற்றத்திற்கான ஆரம்ப வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன; திருமலை - கொழும்பு வீதியில் ஊர்காவற்படைக் குண்டர்கள் குவிக்கப்படுகின்றனர்; இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக ஒப்புக் கொள்ளப்பட்ட அரசியல் கைதிகளில் ஆயிரக்கணக்கானவர்கள் இன்னும் ஸ்ரீலங்கா அரசின் சிறைகளிலும், இராணுவ முகாம்களிலும் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்: சொந்தப் பிரதேசத்திலும், குறிப்பாக இந்தியாவிலும் அகதிகளாக வாழும் ஈழ மக்களின் எதிர்காலம் பற்றி நிச்சயமற்ற சூழலே நிலவுகிறது; விரக்தியும் வெறுப்புமே மக்களின் நெஞ்சங்களை நிறைத்திருக்கின்றன.

கடந்த நான்கு வருட ஈழ விடுதலைப் போராட்டத்திலும், கடந்த நான்கு மாத IPKF - LTTE யுத்தத்திலும் சின்னாபின்னப்பட்ட மக்களின் வாழ்க்கை புனர் நிர்மாணிக்கப்படும் என்பதற்கு எந்த நம்பிக்கையும் தெரிவதாக இல்லை. அத்துடன், மூன்று நான்கு தசாப்தங்களுக்கு மீள் புனரமைக்க முடியாத வாழ்க்கை நிலையை எட்டியுள்ள எமது மக்களுக்கு மேலும் துன்பங்களை ஏற்படுத்தக்கூடிய பலாத்கார வரி வசூலும், கொள்ளைகளும் அதிகரிக்கின்றனவே தவிரக் குறைந்தபாடில்லை. இந்நிலையில் எல்லா விடுதலை இயக்கங்களையும் ஒரே மாதிரியாகப் பார்க்கும் சூழ் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதையும் ஜீரணித்தே ஆகவேண்டும்.

ஈழவிடுதலைப் போராட்டம் திசை தடுமாறித் தேக்கமடைந்த காலத்தில் தான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும், அவ் ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஏழு மாதங்களாகியும் மக்கள் துன்பங்களுக்கு முடிவு கட்டப்படவில்லை.

ஈழமக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கான எமது போராட்டத்தைத் தொடருவதற்கு, மக்களுக்கு உடனடியாக ஒரு ஜனநாயக சமாதானச் சூழல் தேவை என்பதை புரிந்து கொள்ளாவிட்டால், நாம் மேலும் பல தோல்விகளின் சந்திப்பைத் தடுக்க முடியாதவர்களாயிருப்போம். எனவே இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஒழுங்கான முறையில் அமுல் படுத்தச் சகல பிரயத்தனங்களையும் எடுப்பதும், ஜனநாயக - சமாதானத்திற்காகப் போராடுவதும் எமது உடனடிக் கடமையாகும்.

ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக நாம் முன்னெடுத்த ஈழவிடுதலைப் போராட்டத்தினுள்ளே தமிழீழ விடுதலைப் புலிகள், ஜனநாயகத்தை நிராகரிக்கும் ஒரு இயக்கமாக உருவாகி - ஒரு பாசிச இயக்கமாகப் பரிணாமமடைந்துள்ளது.

ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசின் இன ஒடுக்கு முறை, குறுகிய தேசிய வாத இயக்கமாக ஆரம்பித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பாசிக் கொடூரம் என்பவற்றுக்கிடையே சிக்கிக் கொண்டு திணறும் மக்களுக்கு, ஜனநாயக - சமாதான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க ஜனநாயக முற்போக்கு சக்திகள் தம்மால் இயன்றதனைத்தையும் செய்வதற்கு முன்வர வேண்டும்.

ஈழவிடுதலைப் போராட்டம் அதனோடிணைந்த சமூகப் புரட்சி என்றெல்லாம் நாம் தீர்மானம் செய்து வைத்திருந்த திசையில் வரலாறு செல்லவில்லை என்பதை இப்போது பார்க்க முடிகிறது. எனவே எமது போராட்டத்திற்கான சரியான திசை வழியை நாம் இப்போது செப்பனிட வேண்டிய தேவை உள்ளது. அதற்கான அவகாசமும் எமக்கு வேண்டியுள்ளது.

— தொடர்ச்சி 7 ம் பக்கம்...

**புரட்சி என்பது அரச யந்திரத்தைத் தகர்த்தெறிந்து, அந்த இடத்தில் புதிய பெரும்பான்மை மக்களின் அரசை நிறுவுவதே ஆனால் தற்போது ஸ்ரீலங்கா அரசுடன் பகைமை பாராட்டுவதாகக் கூறிக்கொள்ளும் பாசிசக் குழுக்கள், இருக்கும் அரச யந்திரத்தை பாசிச அரசாக மாற்றும் போக்கின் பங்காளர்களாக மாறும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனிய தமிழ் மக்களே!...

# ஏன் இந்த நிலை?

ஒவ்வொரு நாளும் பத்திரிகையில் ஏதோ ஒரு செய்தி இந்தியப் படைகள் பற்றியும் புலிகள் பற்றியும் வந்த வண்ணமே இருக்கின்றன. இவை இரண்டினதும் யுத்தத்திற்கிடையில் அகப்பட்டுப் போயிருக்கும் நீங்கள் ஒவ்வொரு காலமும் உயிரிழிவு உடமையழிவு மற்றும் துன்பங்கள். அச்சம் என்பனவற்றோடு வாழ விடப்பட்டிருக்கின்றீர்கள். ஏன் இந்த நிலை ஏற்பட்டது? ஏன் இந்த நிலை தொடர்கின்றது என்பதைப் பற்றி மக்கள் என்ற வகையில் நீங்களும் மக்களின் உண்மையான நிரந்தரமான அமைதியான வாழ்க்கைக்காகவும் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் உழைக்கும் மக்களின் விடிவுக்காகவும் போராடிக் கொண்டிருக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாங்களும் மேற் கண்ட வற்றைப் பற்றி சிந்தித்து தெளிவு காணுவது எம் அனைவரும் முன்னால் இன்றுள்ள பொறுப்புக்களை உணர்ந்து கடமைகளை முன்னெடுப்பதும் அவசியமாகும்.

இதே வேளை புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் எம்மைப் பார்த்து இந்தியாவிற்கு வால்பிடிப்பவர்கள் என்ற பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்கள். இதன் மூலம் அவர்கள் இதுவரையும் இப்போது • மேற்கொண்ட, மேற்கொண்டு வரும் அரக்கத்தனங்கள் அயோக்கியத் தனங்கள், துரோகத் தனங்களை மறைத்து விடலாம் என, மக்களை ஏமாற்றி விடலாம் என கடுமையாகவே முயற்சிக்கின்றார்கள். இது பற்றியும் உங்களின் பேரால் செயற்படும் ஸ்தாபனம் என்ற வகையில் உங்களுக்கு எமது அரசியற் கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியது எமது பொறுப்பும் கடமையும் எனக் கருதுகின்றோம்.

அந்த அடிப்படையில் இங்கு உங்கள் முன்னால் சில வினாக்களையும், சில விளக்கங்களையும் முன் வைப்பதன் மூலம் எமது நிலையை எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த முயல்கிறோம்.

வெளிநாடுகளிலும் சரி தமிழ் நாட்டிலும் சரி, உள்நாட்டிலும் சரி புலிகளும் அதன் எடுபிடிகளும் ஆதரவாளர்களும் இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து; எம்மையும் வம்புக்கிழுக்கிறார்கள்.

## ஆனால் நாங்கள் உங்கள் முன்னால் வைக்கும் சில கேள்விகள்

1. தாங்க முடியாத துன்பங்கள், தொடர்ச்சியான பல இழப்புக்கள் அத்தனைகளையும் தாங்கிக் கொண்டு நீங்கள் வழங்கிய ஆதரவோடும், நம்பிக்கையோடும் முன்னேறிக் கொண்டிருந்த ஈழ விடுதலைப் போராட்டத்தை சகோதர இயக்கங்கள் மீது யுத்தங்கள் தொடுத்ததன் மூலம் அதனை சீரழித்து குட்டிச் சுவராக்கி நாசமாக்கியவர்கள் யார்?

2. இந்தியாவின் உணவுப் பொட்டலங்களுக்காக எமது மக்கள் அண்ணார்ந்து

## கருத்துப்பகிர்வு

பார்த்திருந்திக்கவேண்டிய கட்டாய சூழ் நிலைகளை உருவாக்கியவர்கள் யார்?

3. புனிதமும், தியாகமும் நிறைந்த எமது இலட்சியப் போராட்டத்தை சாக்கடையாகிப் போன தமிழ் நாட்டு அரசியலுக்குள் கொண்டு போய் விட்டவர்கள் யார்? அரசியல் வாதிகளிடம் மட்டுமல்லாது தமிழ் நாட்டு பொலிஸ் அதிகாரிகளிடமும் கொண்டு போய் எமது போராட்டத்தை அடகு வைத்தவர்கள் யார்?

4. 'பெரிய இயக்க'மென்றும் 'பலமுள்ள இயக்க'மென்றும் சொல்லப்படுகின்ற புலிகள் யாருடைய ஆதரவில், யாருடைய பணத்தில், எந்த சக்திகளின் ஆயுத உதவிகளால் அவ்வாறு ஆகினார்கள்?

5. இந்தியப்படைகள் இலங்கைக்குள் புகுந்த நேரத்தில் ஒரு பக்கம் எதிர்ப்புப் பிரச்சார நாடக நடவடிக்கைகளை நடத்திக்கொண்டு மறுபக்கம் இந்தியாவின் அனைத்து வகைப்பட்ட சொகுசுகளையும் அனுபவித்துக் கொண்டு, இன்னொரு பக்கம் இந்தியப் படைகளின் பல் வேறுபட்ட அதிகாரிகளையும் வீடு வீடாக வரவழைத்து விருந்துபசாரம் நடாத்தி பரிசுகளும் வழங்கியவர்கள் யார்?

## இவற்றோடு இன்னும் சில விடயங்களை ஆழமாக நோக்கினால்:- இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு ஆறு மாத காலமாகியும்

1. இலங்கைக்குள் வந்த இந்தியப் படைகள் மீண்டும் இந்தியாவிற்கு அனுப்பப் படவேண்டுமென நேர்மையான அரசியல் குரல்கள் எமது நாட்டிலும் சரி, இந்தியாவிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி எழுப்பப் பட முடியாமல் இருப்பதற்கும், இந்தியப் படைகள் மேலும் பல மடங்கு குவிவதற்கும், தொடர்ந்தும் அவை இருந்து கொண்டே இருப்பதற்கான நியாயங்களை கூறிக் கொள்வதற்கும் ஆன சூழ் நிலைகளை ஏற்படுத்திக்கொடுத்துக் கொண்டிருப்பவர்கள் யார்?

2. விடிமுந்து வாழ் விழந்து போய் உள்நாட்டிலும், தமிழ் நாட்டிலும் அகதிகளாகவும் அனாதைகளாகவும் நிற்கும் இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் புனர்வாழ்வு அளிக்கப்படுவதற்கும், அழிந்து போன தேசம் புனரமைக்கப்படுவதற்கும் முடியாத சூழ் நிலைகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள் யார்?

3. புலிகளின் நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு எவ்வெவ்வாறெல்லாம் உதவி செய்கின்றன? உதவி செய்து வருகின்றன

3. 1. ஸ்ரீலங்கா அரசாங்கம் கடந்த காலத்தில் நடந்து முடிந்த பேச்சு வார்த்தைகளையும் ஒப்பந்தத்தையும் தனக்குச் சாதகமான வகையில் தந்திரமாக விளக்கம் கொடுப்பதற்கும்

3. 2. செயற்றிறனும் அதிகாரங்களும், உத்தரவாதங்களும் அற்ற மாகாண சபை அமைப்பை யூ. என். பி. அரசாங்கம் எதிர்ப்புக்கள் சிரமங்கள் எதுவுமின்றி சட்டமாக்கிக் கொள்வதற்கும்

3. 3. காரணம் எதுவுமின்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இன்னும் சிறைகளில் அனாவசியமாக ஸ்ரீலங்கா அரசினரால் வாட்டப்படுவதற்கும் மூலகாரணமாய் இருப்பவர்கள் யார்?

ஸ்ரீலங்கா அரசின் ஏமாற்றுத்தனமான ... நடவடிக்கைகளுக்கெல்லாம் எதிராக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருந்து ஓர் ஐக்கியப்பட்ட போராட்டம் உருவாக முடியாமலும், தமிழ் மக்களுக்கு சாதகமான அபிப்பிராயத்தை உலகளாவிய வகையில் திரட்ட முடியாமலும், அவற்றின் மூலம் ஸ்ரீலங்கா அரசின் மீது நெருக்கடியை உருவாக்க முடியாமலும் இருப்பதற்கான சூழ் நிலைகளை உருவாக்கிக் கொண்டிருப்பவர்கள் யார்?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


**அன்பிற்கினிய தமிழ் மக்களே!**
**புலிகள் இதுவரை தமிழ் மக்களுக்கு செய்து வந்துள்ள சேவை என்ன?**

1. 1400க்கு மேற்பட்ட சக போராளிகளை படுகொலை செய்திருக்கிறார்கள். வடக்கிலும், கிழக்கிலும் ஆயிரக் கணக்கான போராளிகளை காட்டுமிராண்டித் தனமான சித்திரவதைக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள்.

2. அவர்கள் விதிக்கும் வரித் தொகையை எந்தத் தமிழ்-மகனாவது முழுமையாக செலுத்தத் தவறினால் அவனுக்குத் துப்பாக்கிச் சூட்டைப் பரிசாக வழங்கி சமூக விரோதி என்ற பட்டமளித்திருக்கிறார்கள்.

3. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமது தாயகம் என்று சொல்லிக் கொண்டாலும் அவை ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்பதில் மூதூர், காத்தான்குடி சம்பவங்கள் மூலம் மிகவும் அக்கறையாகவே செயற்பட்டிருக்கிறார்கள்.

4. தமிழ் மாணவர்களின் கல்வியை அழித்தொழிப்பதில், தமிழ் மக்கள் அழிவுகளையே அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதில், சிவில் நிர்வாகங்கள் இல்லாமல் தமிழ் பேசும் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கவும், அராஜகம் தலை தூக்கி ஆடிக்கொண்டிருக்கவும் வேண்டுமென்பதில் அவர்கள் கண்ணும் கருத்துமாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களே! சிந்தியுங்கள் புலிகள் தமிழ் மக்களின் பாது காவலர்களா? சேவகர்களா? அல்லது அழிவு கார நாச சக்திகளா?
தீர்மானியுங்கள்!
விழித்தெழுங்கள்!

**தொடர்புகளுக்கு:—**
**தமிழ் மாவட்டத் தலைநகரங்களிலுள்ள எமது அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.**
**—EPRLF**

# ஐக்கியம்

## ஒற்றைச்சக்கரத்தால் வண்டிகூட உருளாது. ஒற்றுமைச்சக்கரத்தால் உலகையே உருட்டுவோம்.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ அடக்குமுறைகளைக் கண்டு சகிக்க முடியாது போராட்ட அரங்கிற்கு வந்த இளைஞர்கள் தாம் தாம் விரும்பியவாறு வெவ்வேறு குழுக்களில் EPRLF என்றும் LTTE என்றும் PLOTE என்றும் TELO என்றும் இணைந்து கொண்டார்கள்.

இக் குழுக்கள் யாவுமே ஒற்றுமையாக நின்று போராடியிருக்க வேண்டியது ஒரு வரலாற்று அவசியமாக இருந்தது. ஆனால் எமது போராட்ட அரங்கிற்குள் தலையெடுத்து நிமிர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றமானது ஒரு வரலாற்று விபத்தாக அமைந்து விட்டது. "பொடியன்கள்" ஐக்கியப்பட்டு விட்டார்கள். அவ் ஐக்கியம் விஸ்தரிக்கப்பட வேண்டும், ஆழமாக்கப்பட வேண்டும் என ஈழதேசிய விடுதலை முன்னணி தோன்றிய காலத்தில் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து மகிழ்ச்சி கொண்டிருந்த வேளையில் இக் கோடரிக் காம்புக் குழு ஒவ்வொரு விடுதலை இயக்கமாக சர்வதேச பிற்போக்கு சக்திகளின் ஆயுதங்களினதும் பணபலத்தினதும் துணையுடன் வேட்டையாடத் தொடங்கியது.

மக்களின் நம்பிக்கைகள் தவிடுபொடியாகின. ஸ்ரீலங்கா இராணுவம் எமது வீதிகளில் அரவாரித்தன ஸ்ரீலங்கா அரசும் அதன் 'எஜமானர்களும் எள்ளி நகையாடினார்கள். இயக்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்ததாக கருதப்பட்ட யாழ்குடா நாட்டில் வடமராட்சி அரசபடைகளின் கைகளில் பறிபோனது. இறுதியாக இந்தியா உணவுப் பார்சல்களுடனும் தொடர்ந்து படைகளுடனும் வரவேண்டி ஏற்பட்டது. இந்தியப் படைகளையே மக்கள் 'புரட்சி வீரர்கள்' எனும் வகையில் பூரண கும்பங்கள் தோரணங்களுடன் வரவேற்கும் நிலை ஏற்பட்டது. ஈழப் போராட்டத்தை பின்னடைய வைத்ததில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துரோகம் மன்னிக்க முடியாததாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சோலை காரத் தனங்கள், அடாவடித் தனங்களால் பல ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் அழிக்கப்பட்டும் எமது ஸ்தாபனத்தின் செயற்பாடுகள் முடமாக்கப்பட்டும், எமது தோழர்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டும், எமக்கு ஆதரவு அளித்தவர்கள் துன்புறுத்தப்பட்டும் என அத்தகைய செயல்கள் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த நிலையிலும் கூட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கைகளை நாம் பிரதான விடயமாகக் கருதவில்லை.

ஒற்றுமையைக் குறித்து அழைப்புக்கள் விட்டோம் பேச்சு வார்த்தைகளுக்கு தயாராகவே இருந்தோம். எமது போராட்டம் பிரதானமாகச் ஸ்ரீலங்கா அரசுக்கெதிரான தென்பதில் மிகத் தெளிவாகவே இருந்தோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஸ்ரீலங்கா அரசுக் கெதிரான போராட்டத்தில் சகல போராட்ட இயக்கங்களையும் சமமாக மதித்து அவற்றுடன் நட்புணர்வுடனும் சேர்ந்து செயற்படவும், தேசத்திற்கெதிராகவும், மக்களுக்கு எதிராகவும் அது நடாத்திக்கொண்டிருக்கும் நடவடிக்கைகளை கைவிடவும் தயாராக இருந்தால் எப்போதும் அவர்களுடன் நட்புறவு கொண்டு இயங்குவதற்கு தயாராகவே இருந்தோம் அதைத்தான் இப்போதும் சொல்கிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வளவு போராளிகளைக் கொன்றதன் பின்னரும்; ஈழப் போராட்டத்தையே சிதைத்து நாசமாக்கியதன் பின்னரும் இந்தியப்படைகளுடனான மோதலின் காரணமாக புலிகள் முதுகெலும்பு முறிக்கப்பட்டு பலமிழந்து ஒரு கொலைகார கொள்ளைக்கார கூட்டமாக மாறியிருக்கும் இன்றைய நிலையிலும் கூட அவர்களைத் திருந்திவரும்படி அழைக்கின்றோம்.

இன்றைக்கு எமது மக்களுக்குத் தேவை ஜனநாயகம், ஒற்றுமை, சமாதானம் என்பவையே என்ற எமது புரிந்துணர்வின் அடிப்படையில் புலிகளுக்கு நாங்கள் சமாதான அழைப்பை பகிரங்கமாகவே விடுக்கிறோம்.

ஏனெனில் மக்களின் விடுதலைப் போராட்டம் ஒரு சில தனி நபர்களின் விருப்பு வெறுப்புடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல. ஆத்திரத்திற்கும் பழிவாங்குவதற்கும், பலியிடப்படுவதற்குமான விவகாரமல்ல. மாறாக எமது போராட்டமானது ஈழமக்களினதும், ஸ்ரீலங்கா அரசின் மேல் அதிருப்தி கொண்டு போராட எத்தனிக்கும் சிங்கள மக்களினதும், ஏன் சமாதானம் சகஜ உறவை விரும்பும் இந்து சமுத்திரப் பிராந்திய மக்களினதும் அபிலாசைகளுடனும் சம்பந்தப்பட்ட விடயமாகும்.

போராடும் மக்கள், போராடும் சக்திகள் அனைவரும் ஐக்கியப்படாமல் நடாத்தப்பட்ட எந்தவொரு போராட்டமும் வெற்றி பெற்றதாகச் சரித்திரம் இல்லை. என்பதை புலிகளும் சரி யாராயிருந்தாலும் சரி உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது பாணியைக் கைவிடாது தொடர்ந்தும் அவ்வாறே அவர்கள் தொடருவார்களேயானால் அவர்களது அராஜக நடவடிக்கைகளை அம்பலப் படுத்துவதும், எம்மையும், ஜனநாயகத்துக்காகப் போராடும் ஏனைய குழுக்களையும், ஈழத்திலுள்ள அனைத்து மனித உரிமைகள், ஜனநாயகத்திற்கான சக்திகளையும் தற்காத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதும் எமது கடமையும் உரிமையும் ஆகும். என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். அதற்காக நாம் என்ன செய்கிறோம் என்பது முக்கியமாகாமல் எதற்காக செய்கிறோம் என்பது மட்டுமே முக்கியம் பெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களின் ஜனநாயகத்தை மதித்திருந்தால், மக்களுக்கு சமாதானம் தேவை என்பதைப் புரிந்திருந்தால், ஒற்றுமை வேண்டும் என்பதை உணர்ந்திருந்தால் இன்றைக்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள் ஏற்பட்டிக்காது. எமது மக்களின் ஜனநாயக உரிமைகள்

—தொடர்ச்சி 7ம் பக்கம்...

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# EPRLF உம் இந்தியாவும்

## தோழர்களே! நண்பர்களே!

LTTE யும் அதன் ஆதரவாளர்களும் இப்போதுள்ள தமது தேவைகளுக்காக எம் எமப்பார்த்து இந்திய ஆதரவாளர்கள் என முத்திரை குத்தி எம்மை மக்களிலிருந்து தனிமைப்படுத்த முயற்சிக்கின்றார்கள். இவ் விடயத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் LTTE யும் அதன் ஆதரவாளர்களும் என்ன தான் இந்திய விரோத பிரச்சாரத்தில் ஈடுபட்ட போதிலும் அவ்வாறான பிரச்சாரங்கள் மூலம் இந்தியாவுக்கு நெருக்கடியை உருவாக்கி இந்தியாவானது LTTE க்கு மட்டும் ஆதரவு அளிக்கும் நிலையை உருவாக்குவதையே உள்நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இந்தியப் படைகள் தவிர்க்க முடியாத வகையில் LTTE யுடன் யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும் இந்தியாவின் நோக்கம் LTTE யை முற்றாக நிராகரிப்பது என்பதல்ல.

மாறாக அதனை தனது அரசியல் வழிக்குள் கொண்டு வருவதையே நோக்கமாகக்கொண்டிருக்கின்றது என்பதையும் அதற்காக இந்தியா மீண்டும் LTTE க்கு விட்டுக் கொடுப்புக்களை பேற்கொள்ளலாம் என்பதற்கான சாத்தியக் கூறுகளையும் நாம் மறுப்பதற்கில்லை. அவ்வாறு ஏற்படுகின்றபோது இதே LTTE யும் அதன் ஆதரவாளர்களும் மீண்டும் உரத்த குரலில் இந்தியாவுக்கு வாழ்த்துப்பா பாடத் தொடங்கி விடுவார்கள். என்பதையும் நாம் தெளிவாகப் புரிந்து கொண்டு செயற்படவேண்டியது அவசியமாகும்.

எனவே இன்றைய அரசியற் சூழ்நிலையில் ஆங்காங்கே ஏற்பட்டிருக்கும் இந்திய எதிர்ப்பு பிரச்சார சலசலப்புகளிற்கு எம்மையும் நாம் உட்படுத்திக் கொள்வோமாயின் அது மிக விரைவில் எம்மை நாமே தனிமைப்படுத்தும் தற்கொலை முயற்சியாகிவிடும் என்பதில் நாம் விழிப்பாக இருக்கவேண்டும்.

## அமைதிப்படையைத் துரத்துவோம் – பிறகு?

இதே வேளை இந்தியப் படைகளிற்கும் LTTE க்கும் இடையில் நடந்த யுத்தத்தில் எமது மக்களின் உயிர்களிற்கும். உடமைகளிற்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டதன் விளைவாக எமது மக்கள் மத்தியில் இந்தியப் படையினர் மீது ஒரு வகையான ஆத்திரம் ஏற்பட்டிருப்பதென்பது உண்மையேயாகிலும் அதை வைத்துக் கொண்டு எமது மக்கள் இந்தியாவிற்கு விரோதமான அரசியல் உணர்வைக் கொண்டிருக்கிறார்கள் என நாம் முடிவுக்கு வருவோமாயின் அது தவறாகும் ஏனெனில் எந்தப்படையினர் LTTE க்கு எதிரான யுத்தத்தில் எமது மக்களும் பாதிக்கும் வகையில் நடந்து கொண்டார்களோ, அவர்களே தான் எமது மக்களுக்குத் தேவையான சிவில் நிர்வாகத்தை சீரமைக்க வேண்டியவர்களாகவும் பாதுகாக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்; நிதி, நீதி நிர்வாகங்கள் தடையின்றி ஓடும் நிலைமைகளை உருவாக்க வேண்டியவர்களாக உள்ளனர்; மின்சாரத்தை தொலைத் தொடர்புகளை, குடிநீர் வசதிகளை, போக்குவரத்துகளை ஒழுங்கமைக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்; வைத்திய சேவைகளை புனரமைக்கவும் வசதிகளை கூட்டவும் வேண்டியவர்களாக உள்ளனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்திடமிருந்தும் சிங்கள ஊர்காவல் படையினரிடமிருந்தும் எமது மக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களாக உள்ளார்கள்; கல்வி அமைப்புக்கள் மீண்டும் தடையற்று இயங்க வழிவகுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்; மற்றும் ஏற்பட்ட அழிவுகளை புனரமைக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

மேற் கண்ட புனரமைப்பு சேவைகளை இந்திய சமாதானப்படையினர் செய்கிறார்கள் என்பதற்காக அவர்கள் செய்த அட்டூழியங்களை நாம் மறந்து விடவில்லை. ஆயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கும் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிந்ததற்கும் காரணமானவர்கள். இதுமாத்திரம் அல்லாமல் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இவர்கள் கற்பழிப்புக்கள் உட்பட பெண்களிடம் தகாத முறையில் நடந்துள்ளனர். இக்கொலைகளை நிறுத்தவும் மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை நிறுத்தவும் இந்திய மத்திய அரசிற்கு எமது கண்டனங்களைத் தெரிவித்ததுடன் இவற்றைச் சீர்செய்ய எட்டு அம்சங்களைக் கொண்ட எமது ஆலோசனைகளையும் இந்திய மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தோம். இது தொடர்பாக இந்திய அரசால் சில திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்தோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

ஆனால், இவ்வளவு அழிவுகளையும் செய்த இந்திய சமாதானப்படையினர் தான் மேற்குறிப்பிட்ட நிவாரண வேலைகளையும் செய்து வருகின்றார்கள். அவர்கள் தான் நிவாரண வேலைகளை செய்யவேண்டும் என்பதை மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

## கொலைகளே புலிகளின் கலைகள்!

அதே சமயம் இவ்வளவு சம்பவங்களுக்கும் மூலகாரணமாயிருந்த விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் அழிவு வேலைகளையே செய்து வருகின்றார்கள்; போக்குவரத்தை சீர்குலைத்தல்; பாடசாலை ஆசிரியர்கள் கடமைகளில் செல்கிறார்கள் என்பதற்காகவும், அரசாங்க அதிகாரிகள் கடமையில் ஈடுபடுகின்றார்கள் என்பதற்காகவும், தபால் ஊழியர்கள் கடமைக்கு போகிறார்கள் என்பதற்காகவும் சுட்டுக் கொல்லப்படுதல் போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்த வண்ணமே உள்ளனர்.

ஈழத்தில் இடைக்கால நிர்வாகம் ஏற்படும் வரை இந்திய சமாதானப் படையுடன் மிக அந்நியோன்யமாக இருந்த புலிகள் இடைக்கால நிர்வாகத்தில் மேலதிக ஆசனங்கள் வேண்டவும், மற்ற இயக்கங்கள் இடைக்கால நிர்வாகத்தில் இடம் பெறக்கூடாது என்பதற்காகவும் பல எதிர்ப்பு நாடகங்களை நடத்தினர். அது உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள் என நடந்தன. அதன் தவிர்க்க முடியாத தொடர்ச்சி தான் இந்தியப் படையுடன் புலிகள் போரில் இறங்கியமையாகும்.

நீண்ட தூரப் பார்வையற்ற இவர்களின் வரட்டுத்தனமான கொள்கைகளும் நடவடிக்கைகளும் தொடர்ந்தும் எமது மக்களை கொலைக்களத்துக்கு அனுப்புவதாக மட்டுமே உள்ளன இந்தியப் படையினர் மேற்குறிப்பிட்ட தவறுகளின் மத்தியிலும் கூட தமிழ் மக்களிற்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நல்லுறவுகளையும், பரஸ்பர நம்பிக்கைகளையும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவர LTTE யானது தமிழ் – முஸ்லிம் விரோதங்களும் பகைமைகளும் வளர்வதற்கான நடவடிக்கைகளையே தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. இந்நிலையில் ஒப்பீட்டு ரீதியாக இன்றைய சர்வதேச, உள்நாட்டு அரசியல் அடிப்படையில் எமது மக்களின் நண்பர்கள் யார்? விரோதிகள் யார் என தீர்மானிக்க வேண்டியவர்களாகவே நாம் உள்ளோம்.

## இந்திய ராணுவமும் புரட்சிகர ராணுவம் அல்ல

எமது மக்கள் – இந்திய அரசு என தொடர்பு படுத்திப்பார்க்கையில் இலங்கையில் ஸ்ரீலங்கா அரசு என்ற ஒரு சக்தியும் இருப்பதை நாம் மறந்து விடமுடியாது. இலங்கையில் இந்தியப் படைகள் இருந்தாலும் அரசு என்ற வகையில் எமது மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அரசு இந்திய அரசு அல்ல. அது ஸ்ரீலங்கா அரசே ஆகும். ஸ்ரீலங்கா அரசு தொடர்பாகத்தான் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சக்திகளிற்கும் இந்திய அரசுக்கும் இடையில் உறவுகள் ஏற்பட்டன. பல நிகழ்வுகள் – நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தியப் படைகள் எமது நாட்டுக்குள் 'அமைதிகாக்கும் படை'களாக வரவேண்டிய நிலைமைகள் உருவானது. அமைதிப்படை என்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதன் அர்த்தம் யாரும் எதையும் செய்ய அதைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்கும் படை என்பதல்ல. அவ்வாறன பிரச்சாரத்தை மேற்கொள்வது ஒன்றில் குதர்க்கத்தனமானது அல்லது அறியாமையேயாகும். எந்தக் கூலிப் படையிடமிருந்தும் அதை எதிர்பார்க்க முடியாது.

எனினும் இந்தியப்படைகளிற்கும் LTTE க்கும் இடையிலான யுத்தத்தில் மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்புக்களை இந்தியப் படைகள் தவிர்த்திருக்க முடியாதா? எனக் கேள்வி எழுப்புவோமாகில் நிச்சயமாக மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்பில் பெருமளவு விகிதாசாரத்தை தவிர்த்திருக்கலாம் அதற்கு இந்தியாவானது முன்கூட்டியே LTTE யைப் புரிந்து வைத்திருக்க வேண்டும். இப்படியொரு யுத்தத்தை முன்கூட்டியே எதிர்பார்த்து இழப்புக்களை தவிர்க்க வேண்டும் என்ற நோக்குடன் திட்டமிட்ட தயாரிப்புக்களை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும்.

அவ்வாறு நடந்து இருந்திருந்தால் இந்தியப்படையிலுள்ள சில தனி நபர்கள் ஆங்காங்கே விடக்கூடிய சில தனிப்பட்ட குற்ற விவகாரங்களைத் தவிர பெருமளவில் பாதிப்புக்களைத் தவிர்த்து இருக்கலாம்.

அக்டோபர் 10ம் திகதிக்கு முன்னர் இந்திய அரசாங்கம் கண் மூடித்தனமாக எல்லாவற்றிற்கும் LTTE க்கு பின்னால் போனது அதன் விளைவு LTTE யினரால் இந்தியப்படைகள் தாக்கப்பட்ட பொழுது இந்தியப்படையினர் கட்டுப்பாடற்ற வகையில் கண்மூடித்தனமாக நடந்து கொண்டனர் மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்புக்களிற்கு அடிப்படைப் பொறுப்பு LTTE யையே சாருமாயினும் இவ்விடயத்தில் இந்தியாவின் பொறுப்பும் புறக்கணிக்கப்பட முடியாதது என்ற வகையிலேயே மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்புக்களிற்கு நாம் இந்திய அரசிடம் நிவாரணம் கோரியுள்ளோம். வெளிப்படையாக நாம் இந்தியப்படைகளிற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடாதபோதிலும். இந்திய அரசு, அதிகாரிகளிடம் இந்திய அரசின் தவறுகளையும், பொறுப்புக்களையும் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களையும், நிவாரணங்களையும் திட்டவட்டமாக கூறி வந்துள்ளோம்.

## இந்தியாவிற்குள் நாமில்லை; உலகிற்குள் நாங்கள்

இந்தியப் படையினரின் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு திருத்தங்களும் துரிதமான நிவாரண வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதே வேளை தனது இராணுவபலத்தை இழந்து கொண்டிருக்கும் LTTE ஆனது கொலை, கொள்ளை ஆகிய மக்கள் விரோதச் செயல்களை மிக அதிக அளவில் துரிதமாக்கி இருக்கின்றது.

DAILY NEWS, FRIDAY FEBRUARY 26, 1988

**-USSR official**

In response to question from [...]s regarding the ethnic problem in Sri Lanka an[...] present situation in the North and Eastern par[...] island the speaker categorically stressed that [...] "Tigers" were unreliable, deceiving, cold blooded murderers that could not be trusted, and should be completely wiped out. They were no better than the Dushmans in Afghanistan and the Contras in Nicaragua.

### கொலை வெறி பிடித்த புலிகள் பற்றி சோவியத் யூனியன் கருத்து

**"புலிகளை நம்பமுடியாது, அவர்கள் ஏமாற்றுக்காரர்கள்; நாணயமற்ற. பச்சை இரத்த வெறிபிடித்த கொலைகாரர்கள். இப்படிப்பட்ட புலிகளை முற்றாகத் துடைத்தழித்தல் வேண்டும்.**

**புலிகள் எந்த வகையிலும் ஆப்கானிஸ்தானிலுள்ள 'துஷ்மன்'களை விடவோ அல்லது நிகரகுவாவிலுள்ள 'கொன்ராஸை' விடவோ குறைந்தவர்களல்ல"**

இந்தியாவுடனான நட்பு விடயத்தைப்பற்றிய நமது அணுகுமுறையில் நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு அம்சம் 'சர்வதேச அரசியலில் இந்தியா' என்பதாகும். இன்றைய உலகில் சர்வதேச ரீதியாக நடைபெறும் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டங்கள். தேசிய விடுதலை இயக்கங்கள், வர்க்கப்போராட்டங்கள் தொடர்பாகவும் சோசலிச நாடுகளுடனான உறவுகள் தொடர்பாகவும் இந்தியா சர்வதேச அரசியலில் வகிக்கும் பாத்திரத்தை. அது கடைப்பிடிக்கும் மூல உபாயங்களை, தந்திரோபாயங்களை நாம் சரியாக கணிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

நமது புரட்சிக்கும், சர்வதேச ரீதியாக நடைபெறும் புரட்சி நடவடிக்கைகளிற்கும் பிரிக்கமுடியாத உறவுகள் உள்ளன. நமது புரட்சியை நாமே நடத்த வேண்டும். எனினும், அது இறக்குமதி செய்யப்பட முடியாதது எனினும், அது சர்வதேச அரசியல் விவகாரங்களிலிருந்து தனிமைப்பட்டு நிற்கும் ஒரு செயல்பாடாக அமைய முடியாது. இந்தியாவிற்கும் எமக்கும் இடையேயுள்ள உறவென்பது எவ்வாறயினும் அது வெளிநாட்டு உறவேயாகும். இந்தியாவோடு நமக்குள்ள உறவை தீர்மானிப்பது என்பது எமக்கும் இந்தியாவிற்கும் இடையேயான சர்வதேச உறவை தீர்மானிக்கின்ற விடயமே தவிர உள்நாட்டு உறவுத் தன்மையை அடிப்படையாகக்கொள்ளாது.

## ஜன்னலுக்கு வெளியே...

இந்திய அரசு ஒரு முதலாளித்துவ அரசு. நாமோ முதலாளித்துவ அமைப்பை மாற்றப் போராடுகின்றவர்கள் என்பதில் இருந்து நாம் இந்திய அரசுக்கு எதிராக போராட்டம் நடாத்த வேண்டியவர்கள் என்ற முடிவுக்கு நாம் வரமுடியாது இந்திய முதலாளித்துவ அரசோடும் அதன் அமைப்போடு கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டியவர்கள் இந்திய மக்களும், இந்தியப் புரட்சியாளர்களுமே தவிர எமது ஸ்தாபனமோ எமது மக்களோ அல்ல இதே வேளை இந்தியாவில் உள்ள உழைக்கும் மக்களிற்கும், எமது தேசத்தில் உள்ள உழைக்கும் மக்களிற்கும் உள்ள உறவு என்பது சர்வதேச உழைக்கும் மக்களுக்கிடையேயான வர்க்க உறவேயாகும். இந்திய முதலாளித்துவ அமைப்போடும். அதன் அரசோடும் கணக்குத் தீர்த்துக் கொள்ளும் உரிமையும் கடமையும் எமக்கு எப்படி இல்லையோ அதைப்போலவே அதற்கு முட்டுக் கொடுக்க வேண்டிய அவசியமும் எமக்கில்லை; அதை நாம் செய்யப் போவதுமில்லை.

இந்தியவானது சர்வதேச அரசியல் விவகாரத்தில் ஏகாதிபத்தியத்தின் கூட்டாளியாக செயற்படாத வரையில் தான் எமக்கும் இந்திய அரசுக்கும் இடையில் நட்புறவு இருக்கும் என்பதை இந்திய அரசு அதிகாரிகளிடம் நேரடியாகவும், வெளிப்படையாகவும், உறுதியாகவும் பல தடவைகள் கூறி இருக்கின்றோம் இந்த அடிப்படையில் நாம் இந்தியாவோடு கொள்கை ரீதியில் வரையறுக்கப்பட்ட உறவைக் கொண்டிருக்கிறோமே தவிர மாறாக வெளியில் ஒரு போக்கும் உள்ளே இன்னொரு போக்கும் என கள்ளத்தனமான உறவைக் கொண்டிருப்பவர்கள் அல்ல.

இந்தியாவை எதிர்ப்பது மட்டும் புரட்சிகர நடவடிக்கை ஆகிவிட முடியாது. இந்தியாவை எதிர்ப்பவர்கள் அனைவரையும் நாம் மதிப்பீடு செய்வோமாகில் இவ்விடயத்தை நாம் புரிந்தவர்களாவோம். பணத்துக்காக, ஆயுதங்களிற்காக பதவி அதிகார பகிர்வுகளிற்காக நாம் இந்தியாவோடு உறவு கொண்டிருக்கவுமில்லை. மறுபக்கம் அவற்றிற்காக இந்திய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் கொள்கையற்றவர்களுமல்ல. இதே வேளை எதிர்காலத்தில் எமது புரட்சிப் பாதையில் இந்தியாவானது ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசின் பாதுகாவலனாக நின்று எமது மக்களின் புரட்சிக்கெதிராக இந்திய அரசானது படை நடத்துகின்ற நிலையொன்று ஏற்படுமாகில் அப்போது நாம் இந்தியப் படைகளுக்கு எதிராக போராட்டம் நடாத்த வேண்டி ஏற்படும். அவ்வாறல்லாத காலம் வரை இந்திய அரசுக்கு எதிராக போர் நடாத்த வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. இதில் நாம் ஊசலாட்டம் இன்றி தெளிவாக நின்று செயற்படுதல் வேண்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சமகப்பரப்சியைக் குறித்து

# தென்னிலங்கை மக்களுடன் உறவைப் பலப்படுத்தல்

எமது போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்து கொண்டு செயற்பட்டு வந்த சிங்கள இளைஞர்கள், புத்திஜீவிகள் நூற்றுக்கு மேற்பட்டோரை ஸ்ரீலங்கா அரசு கைது செய்து காலவரையறையின்றி சிறையில் அடைத்து வைத்துள்ளது என்பதையும் அவர்களில் சிலர் எம்மோடு சேர்ந்து ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக சதி முயற்சிகளில் ஈடுபட்டார்கள் என வழக்குத் தொடுத்துள்ளதையும் நீங்கள் அறிவீர்கள்.

எமது போராட்டமானது ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம், வர்க்க ஒடுக்கு முறை, தேசிய ஒடுக்குமுறை இனவெறி ஆகியவற்றுக்கெதிராக இந்த உலகில் நடைபெற்று வரும் போராட்டங்கள் எல்லாவற்றினது ஒரு பகுதியே.

அந்த வகையில் ஸ்ரீலங்கா இனவாத முதலாளித்துவ அரசின் அரசியல், பொருளாதார சமூக ஒடுக்கு முறைகளுக்கெதிராக சிங்கள மக்கள் நடாத்தி வரும் போராட்டங்களிலிருந்து எமது போராட்டத்தை நாம் தனிமைப்படுத்திப் பார்க்க முடியாது. ஸ்ரீலங்கா அரசானது எமக்கு மட்டுமல்லாது சிங்கள மக்களுக்கும் எதிரியே என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

சிங்கள அரசுக்கெதிராக நாம் மட்டுமல்ல சிங்கள மக்களும் போராடி வருகின்றார்கள் என்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது.

எமது போராட்டத்தின் நியாயபூர்வமான தன்மையையும் எமது போராட்டத்தோடு சிங்கள மக்களின் போராட்டமும் ஒருங்கிணைக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் பரந்துபட்ட சிங்கள மக்களுக்கு புரிய வைக்க வேண்டிய கடமையும் எம்முன் உள்ளது.

எம் மத்தியில் உள்ள சில இனவெறித் தன்மையுடைய குழுக்கள் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகம் செய்வதிலும், தென்னிலங்கையிலுள்ள தொழிற்சாலைகளிலும், பொதுமக்கள் செறிவாக நடமாடும் இடங்களிலும் குண்டு வெடிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதிலும் ஈடுபட்டன. அக் குழுக்கள் ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாதத்திற்கு தாங்களும் சளைத்தவர்களல்ல என நிரூபிப்பதில் போட்டி போட்டு செயற்பட்டன.

இக் குழுக்களின் பயங்கரவாத நடவடிக்கைகளினாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) மக்கள் விடுதலை முன்னணி (JVP) மேற்கொள்ளும் தமிழ் மக்கள் விரோத இந்திய விரோத இனவெறிக் கூச்சல்களினாலும், சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக முற்போக்கு, புரட்சிகர நோக்கங்களுடனும் செயற்பட்டு வரும் எமது நட்பு சக்திகள் மிகவும் சிரமத்துக்கும் இயலாமைக்கும் உள்ளாக்கப்பட்டன. ஏன் இன்னும் உள்ளாக்கப்படுகின்றன.

மலையகப் பாட்டாளிகளுக்கு விரோதமான பிரச்சாரத்தின் மூலம் சிங்கள இளைஞர்களைத் திரட்டும் பாணியை முன்னர் கையாண்டு வந்த மக்கள் விடுதலை முன்னணி (JVP) யானது ஈழமக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியா ஈடுபாடு காட்டத் தொடங்கியதைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் விரோதமான சுலோகங்களைத் தூக்கிப் பிடிக்கும் சந்தர்ப்பவாத இனவெறித் தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகிறது. ஈழத்தில் எவ்வாறு ஒரு தமிழீழ விடுதலைப் புலிகளோ அதே வகையான பண்புகளுடன் தென்னிலங்கையில் (JVP) செயற்பட்டு வருகிறது என்பதை நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இனவெறித் தேசியவாதக் குழுக்கள், தோற்றத்தில் கவர்ச்சி மிக்கவையாக இருப்பினும் அவை எவ்வளவு ஆபத்தானவை, பாதகமான விளைவுகளைத் தருபவை என்பதை நீங்கள் அனுபவபூர்வமாக கண்டிருக்கிறீர்கள்.

ஸ்ரீலங்கா அரசை அம்பலப் படுத்துவதிலும் அதன் இனவெறிப்பிடியிலிருந்து சிங்கள மக்களை விடுவித்து அவர்களை அரசுக்கெதிராக நிறுத்துவதிலும் தென்னிலங்கையில் உள்ள ஜனநாயக மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் தம்மால் முடிந்த அனைத்தையும் செயற்படுத்தி வருகின்றன.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ குண்டர்படை, JVP யின் அடாவடித்தனங்கள், பயங்கரவாதம் இவற்றிற்கெதிராகப் போராடும் வேட்கையுடன் ஆங்காங்கே சிங்கள இளைஞர்களும் புத்திஜீவிகளும் சிறிது சிறிதாக அணிதிரண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதே வேளையில் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக மற்றும் முற்போக்கு இடதுசாரி மற்றும் புரட்சிகர சக்திகள் ஆகியவற்றுக்கிடையிலும் ஒருமுகப்பட்ட, பொது எதிரியைக் குறித்த ஒளியில் திரண்ட நிலைமை இல்லை என்பது கவலைக்குரியதே. அண்மைக் காலங்களில் நம்பிக்கைக்குரிய நிகழ்வுகள் தோன்றியிருக்கின்றன. மேற் குறிப்பிட்ட சக்திகளுக்கிடையில் ஒரு ஐக்கியத்தை உருவாக்குவதிலும் நாம் எம்மால் இயன்ற பங்களிப்பை செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஈழமக்களின் விடுதலைக்காக சிங்கள மக்கள் போராடுவதும், சிங்கள மக்களின் விடுதலைக்காக ஈழமக்கள் போராடுவதும் என இரு பகுதி மக்களதும் போராட்டங்கள் ஒன்றோடொன்று ஒருங்கிணைந்த வகையான ஒரு புதிய வளர்ச்சிப்போக்கினை உருவாக்குவதில் நாம் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

இன்றைய வரலாற்றுக் கட்டாயங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு உண்மையோடும் உறுதியோடும் செயற்படுவோம்.



## தோழர் விஜயகுமாரணதுங்கவின் மறைவிற்கு EPRLF இன் அஞ்சலி

இந்த நாட்டின் அரசியல் வானில் இடதுசாரி ஜனநாயக மற்றும் முற்போக்குச் சக்திகளின் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக ஒரு நல்ல உன்னதமான தோழராக மக்களின் விருப்பத்திற்குரிய காந்தக் கவர்ச்சிமிக்க தலைவராக விளங்கிய விஜயகுமாரணதுங்கவிற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது புரட்சிகர அஞ்சலியைச் செலுத்துகிறது.

ஒரு சமூக உணர்வு உள்ள கலைஞராக தனது வாழ்வை ஆரம்பித்து இடதுசாரிகளுடன் நட்புப் பூண்டு இலங்கை வாழ் தொழிலாள வர்க்கத்திற்காகவும், உழைக்கும் மக்கள் அனைவரினதும் உண்மையான ஜனநாயக வாழ்விற்காகவும் தனது வரையறைக்குள் தொடர்ந்து உறுதியாகச் செயற்பட்டவர் தான் தோழர் விஜயகுமாரணதுங்க. ஈழமக்களின் பிரச்சினையில் அக்கறைகாட்டி இந்த நாட்டில் சமாதானம் நிலவவேண்டும் என்பதற்காகவும், இந்த நாட்டு மக்களிடையே ஒற்றுமை நிலவவேண்டும் என்பதற்காகவும் உழைத்த இந்த மனிதனை தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் என்றென்றைக்கும் மறந்து விட மாட்டார்கள்.

ஒரு பக்கம் முதலாளித்துவ அரசும், மறுபக்கம் தறிகெட்ட நிலப்பிரபுத்துவ மிச்சசொச்ச ஆசைகளோடு ஆயுதந் தாங்கி நாசகார கொடூரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இனவெறிச் சக்திகளும் உள்ள இன்றைய நிலையில் தோழர் விஜயகுமாரணதுங்கவின் இலட்சியங்களான ஜனநாயகம், சமாதானம், ஒற்றுமை, சமூகப் புரட்சி என்ற இலட்சியங்களை அடைவதற்காக நாம் விடாப்பிடியாகப் போராடுவதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



.... 3 ம் பக்கத் தொடர்ச்சி

மறுக்கப்பட்டபடியால் தான் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக நாம் போராட வேண்டி ஏற்பட்டது. இந்த நாட்டில் இனங்களுக்கிடையேயான சமாதானமான உறவும் அமைதியான வாழ்வும் சீரழிந்தது. அந்த அடிப்படையை புலிகள் புரிந்து கொள்ள வேண்டும். ஜனநாயகம் இல்லையென்றால் ஒற்றுமையில்லை ஒற்றுமையில்லையென்றால் சமாதானம் இல்லையென்று நாம் கூறும் தாற்பரியமும் அதுதான். மற்றையவர்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்காதவரை புலிகள் தாங்கள் அழிவதைத்தவிர வேறு ஒன்றையும் சாதிக்கமாட்டார்கள்.

எமது மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் திசை திரும்பி நிற்கின்றது. எமக்கிடையில் ஜனநாயகத்தையும் ஒற்றுமையையும் நிலை நிறுத்துவதன் மூலம் மட்டுமே எமது மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் முன்னோக்கி நகரும். இதனை உணர்ந்து செயற்படுவது அனைவரினதும் கடமையாகும்.

எமது தேசிய கௌரவத்தையும், சுயநிர்ணய உரிமையையும் சமூக முன்னேற்றத்தையும் சமாதானமான வாழ்வையும் அடைவதற்கான விடுதலைப் போராட்டத்தை நாம் தொடர்ந்தும் உறுதியாக நடாத்த வேண்டுமானால் எமக்குள் ஒற்றுமை என்பது பிரதானமான விடயமாகும்.

ஒற்றுமை என்பது வெறும் போராடும் அமைப்புக்களுக்கிடையிலான ஒற்றுமையை மாத்திரம் குறிக்காது. பிரதேச வேறுபாடு, சாதி வேறுபாடு, மத வேறுபாடு, இன வேறுபாடு ஆகிய குறுகிய தன்மைகளைக் கொண்ட வேறுபாடுகளைக் கடந்த ஒரு ஒற்றுமையை குறிப்பாக தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி, மலையகத் தமிழர், ஏனைய தமிழர் என்ற வேறுபாடின்றி, தாழ்த்தப்பட்டோர் உயர்ந்தோர் என்ற மனோபாவம் இன்றி ஈழ மக்கள் அனைவரும் ஒரு முகமாக ஓரணியில் திரண்டு நிற்கிறார்கள் என்ற நிலையை நாம் நிலைநாட்ட வேண்டும்.

இயக்கங்களுக்குள் ஜனநாயகமின்மை இயக்கங்களுக்குள் சகோதர உறவின்மை என்னும் நிலைமைகளுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து தொடர்ச்சியாகப் போராடுவதும் மக்களின் பிரதான கடமைகளில் ஒன்றே. மக்கள் பார்வையாளர்களாக இருக்கும் வரை தொடர்ந்தும் கடந்த கால நிலைமைகளே நிலவும் என்பதை உணர்ந்து மக்கள் தமது நிர்ணயகரமான வரலாற்றுப் பாத்திரத்தை ஆற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

எமது ஸ்தாபனத்தைப் பொறுத்தவரை ஈழமக்கள் அனைவருக்கும் இடையிலான ஒற்றுமைக்கும், இயக்கங்களிடையிலான ஒற்றுமைக்கும் தொடர்ந்து உழைத்து வந்திருக்கின்றோம். இனியும் தொடர்ந்து செயற்படுவோம். ஏற்கனவே கூறியபடி ஒற்றுமை என்பதை ஜனநாயகம், பரஸ்பர ஒத்துழைப்பு நட்புறவு என்பனவற்றின் அடிப்படையில் உருவாவதையே நம்புகின்றோம். அந்த அடிப்படையில் இயக்கங்களிற்கிடையிலான ஒற்றுமையை எதிர் காலத்தில் கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

பிற்போக்கு சக்திகளின் வெற்றிக்களிப்பு தற்காலிகமானது என்பதிலும், வரலாறு எந்த வேளையிலும் பின்னோக்கி செல்வதில்லை என்பதிலும் தெளிவான உறுதியுடன் முன்னோக்கி செயற்படுவோம் என அனைவருக்கும் அழைப்பு விடுகின்றோம்.

ஜனநாயகத்தின் அடிப்படையிலேயே ஒற்றுமை!
ஜனநாயகத்தின் அடிப்படையிலேயே சமாதானம்!

**ஜனநாயக வாழ்வுக்கு வழிவகுப்போம்!
அழிவற்ற அமைதியை நிலை நிறுத்துவோம்!**

.... 1 ம் பக்கத் தொடர்ச்சி

நாம் இதுவரை போராட்ட அரங்கில் இருந்தது போல, சட்டபூர்வமற்ற நிலையில் செயற்பட்ட வகையிலேயே தொடர்ந்தும் செயற்படுதல் வேண்டும் எனக் கருதிக் கொண்டிருப்போமானால் வெறும் கற்பனாவாதிகளாகவே இருக்க முடியும். ஆகவே, நாம் வெவ்வேறு நிலைகளில் செயற்படவேண்டியவர்களாயிருக்கிறோம் என்பதனைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இல்லையெனில் உள்ளூர்ப் பாசிசக் குழுக்களுக்குச் சந்தர்ப்பமளித்தவர்களாகி விடுவோம்.

அதே சமயம் தென்னிலங்கையில் புலிகளின் கொலைவாதப் பாணியைப் பின்பற்றி வருகின்ற மக்கள் விடுதலை முன்னணியும் (JVP) இதற்குப் பல பிரபலமானவர்கள் ஆதரவளித்து வருகின்றனர் என்பதும் எதிர்காலத்தில் இலங்கையில் அமையப்போகும் பாசிச அரசுக்கான அபாயச் சங்கொலியாகவே தெரிகிறது தோழர் விஜயகுமாரணதுங்கவின் கொலைக்குப் பின் நிலைமை இன்னும் அபாயகரத்தை எட்டியுள்ளது.

1977 இலிருந்து ஒரு தசாப்தத்திற்கு மேலாகப் பொதுத் தேர்தலை நடத்தாத ஐக்கிய தேசியக் கட்சி அரசின் மேல் மக்களின் அதிருப்தி வளர்ந்துள்ளது. இவ் அதிருப்தியைப் பயன்படுத்தி பாசிச அதிகாரமொன்றை நிறுவும் முயற்சி நடைபெறுவதை அவதானிக்க முடிகிறது.


புரட்சி என்பது அரசு யந்திரத்தைத் தகர்த்தெறிந்து, அந்த இடத்தில் புதிய பெரும்பான்மை மக்களின் அரசை நிறுவுவதே. ஆனால், தற்போது ஸ்ரீலங்கா அரசுடன் பகைமை பாராட்டுவதாகக் கூறிக்கொள்ளும் பாசிசக் குழுக்கள், இருக்கும் அரச யந்திரத்தை பாசிச அரசாக மாற்றும் போக்கின் பங்காளர்களாக மாறும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே புதிய அடக்குமுறை வடிவ அரசொன்றை நோக்கிய போக்கைப் புரிந்து கொள்ளாமல் அரசு பற்றிய சில மனப்படங்களை உருப்போட்டுக்கொண்டு குழப்பமடையாமல், இப்போக்கைத் தெளிவாக எடைபோட வேண்டும்.

ஒரு விடயத்தை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஸ்ரீலங்கா ஐ. தே. கட்சி அரசுக்கு அன்று உதவிக்கரம் நீட்டிய சர்வதேச பிற்போக்கு சக்திகள் இன்று உள்ளூர் பாசிசக் குழுக்களான மக்கள் விடுதலை முன்னணிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் உதவி செய்யவில்லை என்று கருதிவிடக்கூடாது.

இத்தகைய அபாயகரமான சூழலின் பின்புலத்திலேயே, நாம் சமாதானம் – ஜனநாயகத்திற்கான கோரிக்கையை விடுக்கிறோம். இலங்கை – இந்திய ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கோருகிறோம். சகல அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோருகிறோம்.

**சமாதானத்தின் பகைவர்களை நிராயுதபாணிகளாக்குவோம்!
சமதர்ம சமுதாயத்தை நிர்மாணம் செய்வோம்!**




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# புதிய கண்ணோட்டம்

பங்குனி 1988 வெளியீடு – 1


## எச்சரிக்கை

"இனி தோழர் ஹிட்லரின் ஆட்சியென்று
வாழ்த்துச் சொல்லி வரவேற்றேன்.
வந்தனர் ஹிட்லரின் சேவகர்
யூதர்களைக் கொன்று போட்டனர்
நான் யூதனில்லை என்பதால்
எதிர்க்காதிருந்தேன்
கம்யூனிஸ்ட்களைக் கொன்றார்கள்
நான் கம்யூனிஸ்ட் இல்லையாதலால்
கவலைப்படவில்லை
தொழிற் சங்க வாதிகளைக் கொன்றார்கள்
நான் தொழிற் சங்க வாதி இல்லை
எனவே எதிர்க்காமலிருந்தேன்
புரொட்டஸ் தாந்தினரைத் தேடிக் கொன்றார்கள்
நான் கத்தோலிக்கன் ஆதலால்
கவலைப்படவில்லை
கடைசியில், என்னைப் பிடிப்பதற்காக
அவர்கள் வந்தபோது
எனக்காகக் குரல் கொடுக்க யாருமிருக்கவில்லை

ஹிட்லரால் கொல்லப்பட்ட, சித்திரவதைக்குள்ளான, சிறைப்பிடிக்கப்பட்ட அனைவருக்கும் ஹிட்லர் சூட்டிய பட்டம் "சமூக விரோதிகள்" என்பதே.

ஹிட்லர் அதிகாரத்திற்கு வருமுன்னர் ஜெர்மனியின் இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளின் மத்தியிலிருந்த குழப்பத்தை இங்குள்ள இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகளும் கொண்டிருப்பது தெரிகிறது.

மக்கள் அபாயத்தைத் தெரிவு செய்து கொண்டு பின்னும் அவலங்களுக்கும் அடக்குமுறைக் கொடூரங்களுக்கும் உள்ளாகி விடக்கூடாதென்பதை நாம் முன் கூட்டியே எச்சரிக்க வேண்டியிருக்கிறது.

மக்களுக்காக மறைந்த தோழர்களுக்கு
புதிய கண்ணோட்டத்தின்

## வீர அஞ்சலி

கடந்த நான்கு வருட கால போராட்ட நிகழ்வுகளையும் விளைவுகளையும் திரும்பிப் பார்க்கிறபோது, மக்களுக்குச் சுபிட்சமான வாழ்வு கிட்டவேண்டும். என்பதையே தமது நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வந்த போராளிகள் பலரையும் அரச பயங்கரவாதமும் பாசிச கொலை வெறி பிடித்த புலிகளும் பலி கொண்டு விட்ட அவலமே பூதாகரமாய்த் தெரிகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்களின் புரட்சிகரமான வரலாற்றுப் பாத்திரத்தைக் கொச்சைப் படுத்தும் நோக்கில் ஸ்ரீலங்கா அரசு 'பயங்கரவாதிகள்' என்ற பட்டத்தைச் சூட்டிவிட முயன்றது. இதே வேளை மறு பக்கம் புலிகள் இத் தோழர்கள் மீது 'சமூக விரோதிகள்' என்ற முத்திரையைக் குத்தி விட முயன்றது. ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாதத்தையும் பொய்ப் பிரச்சாரங்களையும் இந்த உலகம் அன்றே அடையாளம் கண்டு கொண்டது ஆனால் சிறிதுகாலம் தாமதித்த போதிலும், புலிகளின் பாசிசக் கொடூரங்களையும், மக்கள் விரோதத் தன்மைகளையும் இப்போது இந்த உலகம் அடையாளம் கண்டு கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசினதும் புலிகளினதும் எத்தகைய விதமான பொய்ப்பிரச்சாரச் சேறுகள் அள்ளி வீசப்பட்ட போதிலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் தமது தனிப்பட்ட நலன்களைப் பற்றி அக்கறை கொள்ளாமல் மக்களின் நலன்களையும் நல் வாழ்வையும் முன்னிறுத்தி, அவற்றுக்காக விடாப்பிடியாகப் போராடினார்கள். நிதிப் பற்றாக்குறை. ஆயுதப்பற்றாக் குறை ஆகியவற்றின் மத்தியிலும் தமது இலட்சியங்களுக்காக எல்லா கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு உறுதியுடன் போராடினார்கள். அந்தப்போராட்டம் இன்னும் தொடர்கிறது.

உடனடியாக மக்கள் மத்தியில் ஜனநாயகம், ஒற்றுமை, சமாதானமான வாழ்வு நிலவ வேண்டும் என்பதுவும், நீண்ட காலத்தில் முழுமையான ஜனநாயகம், உண்மையான சமத்துவம், நிரந்தரமான சமாதானம் என்பவற்றை நிலை நிறுத்துவதுவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியற் குறிக்கோள்களாகும்.

இவற்றிற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் எல்லாவகையிலும் போராடினார்கள் போராடி வருகின்றார்கள். இந்தப் பாதையில் உழைத்து மறைந்த தோழர்களுக்கு புதிய கண்ணோட்டம் தனது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றது. அத்தோழர்களை மக்களுக்காக அளித்த அவர்களின் பெற்றோர்களுக்கும் புதிய கண்ணோட்டம் தனது சிரம்தாழ்த்தி மரியாதை செய்கின்றது.



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்கள் ஏன்? எதற்காக? யாருக்காக? எவற்றை நிலைநிறுத்துவதற்காகப் போராடினார்கள், போராடி வருகிறார்கள் என்பதைச் சரியான முறையில் சிந்தித்துச் செயற்படும்படி தொழிலாளர்களை, விவசாயிகளை, முற்போக்குச் சிந்தனை கொண்ட படித்தோரை புதிய கண்ணோட்டம் இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றது.


ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி–EPRLF

[redacted] கடற்கரைவீதி, யாழ்ப்பாணம் அ.சுகுணகுமாரனினால் 119, பங்களாசுக்கடிகாயீந், ரத்தனபிட்டிய, பொரலஸ்கமுவ ஸ்ரீ. ஆர். ரீ. அச்சகத்தில் 15-03-1988 அன்று அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்